**DEPOSITION OF WITNESS**

# IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI
## OS 144-2020
## PW-1

பெயர் : பாலகிருஷ்ணன்
த/பெ : ஆறுமுகசாமி
தேதி : 10.07.2023

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதிகளாகிய நாங்களும், பிரதிவாதிகளும் மற்றும் 6 நபர்களும் சேர்ந்து தாவாச் சொத்தை வா.சா.ஆ.1 ன் படி கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். பின்னிட்டு எங்களால் விஜயகிரி வேலாயுதசாமி கல்வி அறக்கட்டளை கடந்த 18.02.2016 ம் தேதியில் உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரையம் பெற்ற பூமியை கடந்த 07.04.2016 ம் தேதி வா.சா.ஆ.3 வாடகைப்பத்திரம் மூலம் விஜயகிரி வேலாயுதசாமி கல்வி அறக்கட்டளைக்காக 50 ஆண்டுகாலம் குத்தகைக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அக்காலகட்டத்தில் கல்வி நிறுவனம் ஆரம்பிப்பதற்காக முயற்சிகள் எங்களால் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அப்போது அறக்கட்டளையின் தலைவராக நான்தான் இருந்தேன் என்றால் சரிதான்.

2. 04.04.2017 ம் தேதி நானும் 2 ம் வாதியான என் மகளும், மற்றவர்களும் சேர்ந்து கல்வி நிறுவனம் நடத்துவது சம்பந்தமாக எங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்தோம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தின் படி விஜயகிரி வேலாயுதசாமி கல்வி அறக்கட்டளையை நாங்களே நிர்வாகம் செய்து கொள்வதாக எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். மேலும் அந்த ஆவணத்தில் 3 முதல் 17 லக்கமிட்டவர்கள் ஒப்பந்தத்தின் சரத்துக்கள் படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் 1 மற்றும் 2 லக்கமிட்டவர்கள் எடுக்கும் நடைமுறைகளுக்கு கட்டுப்பட்டவர்கள் என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

3. ஆனால் நான் அந்த ஒப்பந்தப்படி நடந்து கொள்ளாத காரணத்தினால் எனக்கும் மற்ற நபர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவி வந்தது என்றால் சரிதான். எங்களுக்குள் மேற்படி ஒப்பந்தத்தை தவிர வேறு எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். கடந்த 10.01.2019 ம் தேதி வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் அறக்கட்டளையில் உள்ள மற்ற நபர்களுக்கு பாகப் பாத்திய விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான், ஆனால் சார்பதிவாளர் அலுவலகம் வரும் வரையில் எனக்கு என்ன பத்திரம் என்று தெரியாது. என்னை மிரட்டி கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள்.

4. வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி ஆணத்தை பதிவு செய்த சமயத்தில் எனது மற்றும் இரண்டாம் வாதியின் அடையாள அட்டையை நான்தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல, அவை ஏற்கனவே அறக்கட்டளையில் இருந்த நகல்கள் ஆகும். சார்பதிவாளர் என்னிடம் எந்த அசல் அடையாள அட்டையையும் வாங்கிப் பார்க்கவில்லை.

5. குன்னத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி வா.சா.ஆ.4 ஆவணத்தை நான்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ.4 ஆவணத்தில் விடுதலை கொடுப்பதற்காக ஏனைய அறக்கட்டளையின் பங்குதாரர்களிடமிருந்து தகுந்த பிரதிபலனை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் முறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் நான் தற்போது இவ்வழக்கிற்காக அவற்றை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு பின்பு நானும் எனது மகளும் எழுத்து பூர்வமாக கடிதம் கொடுத்து மேற்படி அறக்கட்டளையில் இருந்து எங்களை வெளியேற்றிக் கொண்டோம் என்றால் சரியல்ல.

6. நாங்கள் கொடுத்த கடிதத்தின் பேரில் எங்களை அறக்கட்டளையில் இருந்து நீக்கி 24.05.2019 ம் தேதியன்று துணை ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதி தரப்பு ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் எப்போது எடுக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நான்

அறக்கட்டளையின் மற்ற உறுப்பினர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் 2, 3 பிரதிவாதிகள் மற்றும் ஒரு நபரின் பேரிலும் புகார் கொடுத்துள்ளேன். நான் ஒப்பந்தத்தின் படி கல்வி நிறுவனத்தையும் அறக்கட்டளையையும் சரியாக நடத்த இயலவில்லை என்றாலும் அதன் காரணமாகதான் வா.சா.ஆ.4 ஆவணத்தையும் எங்களை அறக்கட்டளையில் இருந்து வெளியேற்றிகொள்ள கடிதத்தையையும் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. நான் வா.சா.ஆ 5 ஆவணத்தில் நான் ஏற்கனவே கொடுத்த புகாரின் பேரில் காவல் கண்காணிப்பளார் எதிரிகளின் செல்வாக்கிற்கு பயந்து நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருகிறார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதிலும் நான் எதிரிகளாக 15 பேரை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். நான் இத்தாவாவை தாக்கல் செய்த சமயத்தில் விஜயகிரி கல்வி அறக்கட்டளைலோ அல்லது கல்வி நிறுவனத்திலோ எந்த வித பொருப்புகளையும் வகிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நான் எந்த பொருப்பையும் வகிக்கவில்லை என்றாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் சேர்மேனாக இருந்தேன்.

8. நான் அவ்வாறு சேர்மேனாக இருந்ததை நிருபிக்க எதேனும் ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன், நான் அறக்கட்டளையின் பொருப்பில் இருந்து வெளியேறவில்லை. நான் தற்போதும் மேற்படி அறக்கட்டளையின் இருப்பதற்கு அண்மையில் ஆவணங்களை எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் அறக்கட்டளைக்கும் வா.சா.ஆ.4 ஆவணத்தின் பிறகும் நாங்கள் கொடுத்த வெளியேற்று கடிதத்திற்கு பிறகும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் மற்ற பிரதிவாதிகளை எனக்கு அடிபனிய வைப்பதற்காக இத்தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. பிரதிவாதிகள் தான் தற்போதும் அறக்கட்டளையையும் கல்வி நிறுவனத்தையும் கவனித்து வருகிறார்கள் என்றாலும் எனக்கும் மேற்படி அறக்கட்டளைக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நானும் 2ம் வாதியும் அறக்கட்டளையின் ஒப்பந்தம் படி சரிவர நிர்வகிக்க இயலாத காரணத்தில்தான் மற்ற அறக்கட்டளையின் உறுப்பினர்களாக அலோசித்து தகுந்த பிரதிபலன் பெற்று வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் விடுதலை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தற்போதும் அறக்கட்டளையில் நிர்வகித்து வருவதற்கு ஏதேனும் ஆவணங்களை அடுத்த வாய்தாவிற்குள் கொண்டுவர இயலுமா என்றால் நான் அங்கு சென்றால் என்னை மிரட்டுவார்கள்.

10. நான் தாவாவில் கூறியுள்ளது போல் அறக்கட்டளையை நிர்வகிக்கவில்லை என்றாலும் அவ்வாறு இருக்கையில் அறக்கட்டளையை நிர்வகித்து வரும் பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்து கட்டளையை என்னால் கோர இயலாது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2023.07.10 14:59:32 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.